**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.128/16 மற்றும் 179/16 நாள்.09.02.2021**

2021-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09-ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் | |
| த.பெ/க.பெ. | நந்தகோபால் | சாதி | |
| கிராமம் | செல்லபிராட்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 39 |

**ம.சா.1**

**குறுக்கு விசாரணை**

விபத்திற்கு நஷ்டயீடு கோரி மனுதாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த சமயம் எனக்கு 35 வயது. நான் செஞ்சி கமிட்டியில் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். சுமார் 15 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். நான் 5ம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன். சிறுதி வயதிலிருந்தே என் குடும்ப கஷ்டத்தின் காரணமாக வேலை செய்து வருகிறேன். மாதம் ரூ.15,000/- சம்பாதிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 12.02.2016ம் தேதியில் கன்னலத்திலிருந்து செஞ்சியை நோக்கி முனீஸ்வரன் கோவில் அருகே இந்த விபத்து நடந்தது. காலையில் சுமார் 09.00 மணிக்கு விபத்து நடந்தது. செல்லபிராட்டியிலிருந்து மலையனூர் அங்காளம்மான் கோவிலுக்கு திருமணத்திற்காக இருசக்கர வாகனத்தில் 3 நபர்களாக சென்றோம். இருசக்கர வாகனம் கார்த்திக்கு தெரிந்தவரின் வாகனம். விபத்து சமயத்தில் கார்த்தி இருசக்கர வாகனத்தை ஓட்டினார். சூர்ய என்கிற ஜெயசந்திரன் இருசக்கர வாகனத்தில் நடுவில் உட்கார்ந்திருந்தார், கார்த்தி ஓட்டினார், நான் பின்புறம் உட்கார்ந்திருந்தேன். இருசக்கர வாகனத்தின் பதிவு எண். டிஎன் 19 ஏ

5783 ஆகும். இருசக்கர வாகனத்தில் 3 பேர் பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்டிய கார்த்திக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. கார்த்தி வளைவில் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் ஓட்டி சென்று ரோட்டிற்கு ஓரம் உள்ள பாறையில் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு கால் முட்டி, இடுப்பில், தோள் பட்டை ஆகிய இடத்தில் எனக்கு காயம் பட்டது. எனக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை. சம்பவயிடத்திலேயே கார்த்தி இறந்துவிட்டார். 108 ஆம்புலன்சு மூலமாக நான் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். பின்பு விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் ரோமல் சிகிச்சைக்கு சென்றேன். 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்று தெரியவில்லை. அரசு மருத்துவமனையில் சிகிச்சை இலவசம் என்றால் சரிதான். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ரூ.20,000/- கடன் வாங்கி செலவு செய்ததாக இந்த மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.த.சா.3 பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது. ம.த.சா.3 ஆக்ட்பாலிசி தான் என்றாலும், அதில் 3ம் நபர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுதான் வழங்கமுடியும் என்றாலும், இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தவர்கள் இழப்பீடு கோர முடியாது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த இழப்பீடும் தர கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.